1989 ஏப்ரல் 3]

கடலில் மீன் பிடிக்கும்போது இறந்துபோகும் மீனவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் உதவித் தொகை

21—(*வினா எண் 617)—திரு. ஆர். சிங்காரம் மற்றும் திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடலில் மீன் பிடிக்கும்போது இறந்துபோகும் மீனவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் மீன் பிடிக்கும்போது இறந்து போகும் மீனவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பேராவூரணி தொகுதியைச் சார்ந்த காரங்கொடா என்ற கிராமத்தில் கடந்த 23—3—1989ஆம் நாள், ராமு, சத்தியமூர்த்தி என்ற இருவர் இறந்துவிட்டார்கள். அதிலே ராமு என்பவருக்கு உதவித் தொகை பெறுவதற்கான தகுதியும் வயதும் இருக்கின்றன. ஆனால் சத்திய மூர்த்தி என்ற 12 வயது இளைஞரும் அதிலே இறந்து விட்டார். அவருக்கு உதவித் தொகை கொடுப்பதற்கு விதியில் இடம் இல்லை. ஆனால் கருணை உள்ளம் கொண்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ஏதாவது உதவித் தொகையை கருணை உள்ளத்தோடு அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய ஆலோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 23—3—1989 அன்று இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் நிவாரண நிதியிலிருந்து உதவி வழங்குவதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்கள் ஆந்திர மாநில கடல் பகுதியில் சென்று மீன்பிடிக்கும்போது அவர்கள் ஆந்திர மீனவர்களால் பிடித்து வைக்கப்பட்டார்கள். அவர்களை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி நேற்று முன்தினமே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் அறிவித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலிலே மீன் பிடிக்கச் சென்று இறந்தவர்களுக்கு வழங்கப்படுகிற உதவிப் பணம் போக, திடீரென்று குடும்பத்தினுடைய தலைவர் இறந்து விட்டால் ஏற்படுகிற இழப்பிற்காக ரூ. 2 ஆயிரம் வழங்கப்படும் என்று நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறதே, இவர்களும் அதற்குத் தகுதி உடையவர்களாவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டபடி தகுதி பெற்ற அனைவருக்கும் உதவித் தொகை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9—30)

திரு. இரா. மோகன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் மீன் பிடிக்கச் செல்லுகின்றபோது இறந்துபோகின்ற மீனவர்களுடைய குடும்பத்தினருக்கு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. நம்முடைய மீனவர்கள் ஆயிரக்கணக்கான பேர்கள் கற்காலத்தைப் போலவே இன்னும் கட்டுமரத்திலே போய் மீன் பிடித்துக்கொண்டு வருகிறார்கள். எந்தவிதமான விஞ்ஞான ரீதியான உபகரணங்களும் இல்லாமல் அதற்கேற்ற எந்த விமான ஆலோசனையும் அவர்களுக்கு வழங்கப்படாமல் வலை எடுத்துக்கொண்டு கட்டுமரங்களிலேதான்போய் எப்போது திரும்பிவருவார்களோ, அது காற்றைப் பொறுத்தது என்ற நிலைதான் இருக்கிறது. நவீன முறையிலே மீன் பிடிக்க ஏராளமான புதிய முறைகள் உலகெங்கும் அன்றாடம் வளர்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அரசு அவற்றை பரிசீலித்து அந்த முறைகளையெல்லாம் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்து, தேவையானவற்றையும் தந்து மீன் பிடிக்க அனுப்புகின்ற திட்டம் இந்த அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே நவீன முறையில் மீன் பிடிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்த விசைப் படகுகள் ஏராளமாக வழங்க வேண்டும் என்கின்ற எண்ணம் இருந்தாலும்கூட அதன் காரணமாக கட்டுமரத் தொழிலாளிகள் பலபேர் வேலை இழக்க நேரிடும் என்கின்ற ஒரு நிலையும் உருவாகியிருக்கிறது. எனவே, இப்போதே கட்டுமரத் தொழிலாளிகள் தங்களுக்கு விசைப் படகுகள் தேவையில்லை. கட்டுமரத்திலேயே சென்று மீன் பிடிக்கிறோம் என்று கூறுகிறார்கள். இதன் காரணமாகப் பல பகுதிகளில் கட்டுமரத் தொழிலாளிகளுக்கும், விசைப் படகு மூலமாக

1989 ஏப்ரல் 3] [டாக்டர் மு. கருணாநிதி]

மீன் பிடிப்பவர்களுக்கும் தகராறுகள்கூட ஏற்பட்டு அரசின் சார்பிலே பல முறை முன்பும் சரி, கடந்த காலங்களிலும் சரி இருவரிடையே சமரச முயற்சிகள் எல்லாம் செய்து வைக்கப் பட்டு இருக்கின்றன. எல்லோருக்கும் நவீனமான மீன் பிடிக் கின்ற படகுகளை அளிப்பதில் அரசுக்கு ஆட்சேபணை இல்லை. அதற்குரிய நேரம் வரவேண்டும்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்கடலில் மீன் பிடிக்கப் போகின்றபோது ஒருவரைக் காண வில்லை என்று சொன்னால் கேரள மாநிலத்திலே ஹெலிகாப்டர் மூலமாக, விசைப் படகு மூலமாக தேடிப் பிடிக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை கடந்த அரசில் நாம் எழுப்பியபோதே குமரி மாவட்டத்திற்கு ஒரு ஹெலிகாப்டர் வசதியும், அதே போன்று விசைப் படகும் வைத்து தேடுவதாகச் சொன்னார்கள். அரசு ஆணையிட்டது. குமரி மாவட்டத்திலே இதுவரை யிலும் 4, 5 பேர்கள் காணாமல் போனாலும், இறந்துபோனாலும் கூட அவர்களைத் தேடிப் பிடிப்பதற்கு விசைப் படகுகூட இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா? ஒரு ஹெலிகாப்டர் மூலமாக கேரள மாநிலத்தில் செய்வதைப் போல முந்தைய அரசு ஆணையிட்டதைப்போலச் செய்வதற்கு இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்ளே, விசைப்படகு ஏற்பாடு பற்றி எனக்குத் தெரியாது. கடந்த அரசில் உறுதியளித்ததாகச் சொன்னார்கள். அதைப்பற்றி ஆராயப்படும். ஹெலிகாப்டர் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற் கெனவே இந்த அரசு வாங்கியிருக்கிற ஹெலிகாப்டரே பயணம் செய்வதற்கு சரியான முறையில் இல்லை என்கின்ற காரணத்தால், அதை விற்றுவிடலாமா என்று யோசனை செய்யப்பட்டு வருகிறது.

மங்கலம் கிராமத்தில் தீவிர கைத்தறி சங்கம்.

22—(*வினா எண் 266)—**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்றம் அடுத்த மங்கலம் கிராமத்தில், தீவிர கைத்தறி சங்கம் தற்போது இயங்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

(ஆ) அதனை மீண்டும் இயங்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: (அ) மற்றும் (ஆ): திருக் கழுக்குன்றம் அடுத்த மங்கலம் கிராமத்தில் மங்கலம் வேதகிரீஸ் வரர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் ரூ. 1.42 இலட்சம் மதிப்புள்ள துணி குறைவு இருப்பது கண்டுபிடிக்கப்

TRUTH ALONE TRIUMPHS